# ஏப்ரல்- 04 - செவ்வாய்

**புனித இசிதோர்**

**என்னை அனுப்பியவர் என்னோடு இருக்கிறார் யோவா.8:29**

## முதல் வாசகம்: எண் 21: 4 – 9

ஏதோம் நாட்டைச் சுற்றிப்போகும்படி ஓர் என்ற மலையிலிருந்து அவர்கள் "செங்கடல் சாலை" வழியாகப் பயணப்பட்டனர் அவ்வழியை முன்னிட்டு மக்கள் பொறுமையிழந்தனர்.மக்கள் கடவுளுக்கும் மோசேக்கும் எதிராகப் பேசினர் "இந்தப் பாலைநிலத்தில் மாளும்படி எங்களை எகிப்திலிருந்து கொண்டு வந்தது ஏன்? இங்கு உணவுமில்லை, தண்ணீருமில்லை, அற்பமான இந்த உணவு எங்களுக்கு வெறுத்துப் போய்விட்டது" என்றனர்.உடனே ஆண்டவர் கொள்ளி வாய்ப் பாம்புகளை மக்களிடையே அனுப்பினார் அவை கடிக்கவே இஸ்ரயேல் மக்களில் பலர் மாண்டனர்.அப்போது மக்கள் மோசேயிடம் வந்து, "நாங்கள் பாவம் செய்துள்ளோம்" நாங்கள் ஆண்டவருக்கும் உமக்கும் எதிராகப் பேசியுள்ளோம் அவர் இந்தப் பாம்புகளை அகற்றி விடும்படி நீர் ஆண்டவரிடம் வேண்டிக் கொள்ளும்" என்றனர். அவ்வாறே மோசே மக்களுக்காக மன்றாடினார்.அப்போது ஆண்டவர் மோசேயிடம், "கொள்ளி வாய்ப் பாம்பொன்றைச் செய்து அதை ஒரு கம்பத்தில் பொருத்து கடிக்கப்பட்டோரில் இதைப் பார்க்கிற ஒவ்வொருவனும் பிழைப்பான்" என்றார்.அவ்வாறே மோசே ஒரு வெண்கலப் பாம்பைச் செய்து அதை ஒரு கம்பத்தில் பொருத்தினார் பாம்பு கடித்த எந்த ஒரு மனிதனும் இந்த வெண்கலப் பாம்பைப் பார்த்து உயிர் பிழைப்பான்.

**பதில்பாடல் :** ஆண்டவரே! என் மன்றபட்டைக் கேட்டருளும்

## நற்செய்தி: யோவான் 8: 21- 30

அக்காலத்தில் இயேசு பரிசேயர்களை நோக்கி, "நான் போன பின் நீங்கள் என்னைத் தேடுவீர்கள். நான் போகுமிடத்திற்கு உங்களால் வர இயலாது. நீங்கள் பாவிகளாகவே சாவீர்கள்" என்றார்.யூதர்கள், ""நான் போகுமிடத்திற்கு உங்களால் வர இயலாது" என்று சொல்கிறாரே, ஒருவேளை தற்கொலை செய்து கொள்ளப் போகிறாரோ?" என்று பேசிக்கொண்டார்கள்.இயேசு அவர்களிடம், "நீங்கள் கீழிருந்து வந்தவர்கள் நான் மேலிருந்து வந்தவன். நீங்கள் இவ்வுலகைச் சார்ந்தவர்கள். ஆனால் நான் இவ்வுலகைச் சார்ந்தவன் அல்ல.ஆகவேதான் நீங்கள் பாவிகளாகவே சாவீர்கள் என்று உங்களிடம் சொன்னேன். "இருக்கிறவர் நானே" என்பதை நீங்கள் நம்பாவிடில் நீங்கள் பாவிகளாய்ச் சாவீர்கள்" என்றார்.அவர்கள், "நீர் யார்?" என்று அவரிடம் கேட்டார்கள். அவர், "நான் யாரென்று தொடக்கத்திலிருந்தே சொல்லி வந்துள்ளேன்.உங்களைப் பற்றிப் பேசுவதற்கும் தீர்ப்பிடுவதற்கும் பல உண்டு. ஆனால் என்னை அனுப்பியவர் உண்மையானவர். நானும் அவரிடமிருந்து கேட்டவற்றையே உலகுக்கு எடுத்துரைக்கிறேன்" என்றார்.தந்தையைப்பற்றியே அவர் பேசினார் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை.இயேசு அவர்களிடம், "நீங்கள் மானிட மகனை உயர்த்திய பின்பு, "இருக்கிறவர் நானே" நானாக எதையும் செய்வதில்லை மாறாகத் தந்தை கற்றுத் தந்ததையே நான் எடுத்துரைக்கிறேன் என்பதை அறிந்து கொள்வீர்கள்.என்னை அனுப்பியவர் என்னோடு இருக்கிறார். அவர் என்னைத் தனியாக விட்டுவிடுவதில்லை. நானும் அவருக்கு உகந்தவற்றையே எப்போதும் செய்கிறேன்" என்றார்.அவர் இவற்றைச் சொன்னபோது பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர்.

**தியானம்:** மனிதர்களுடைய பெரும்பான்மையான கவலையெல்லாம் தன்னுடைய உடலை, உணர்வுகளை திருப்திப்படுத்துவது எப்படி என்பதில்தான் அமைந்திருக்கின்றது. எனவேதான் கடவுள் மனிதனைப் பார்த்து சொல்கின்றார், "எதை உண்போம்? எதைக் குடிப்போம்? எதை அணிவோம்? எனக் கவலை கொள்ளாதீர்கள். ஏனெனில் பிற இனத்தவரே இவற்றையெல்லாம் நாடுவார்கள். உங்களுக்கு இவை யாவும் தேவை என்பது உங்கள் விண்ணகத் தந்தைக்கு தெரியும்." (மத் 6:31-32). பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்ற பழமொழிக்கு ஏற்ப பாலை நிலத்தில் தங்களைப் பராமரித்து வழி நடத்தி வந்த கடவுளுக்கு நன்றி செலுத்தாமல், அற்ப உணவுக்காகவும், தண்ணீருக்காகவும் கடவுளை எதிர்த்து கூச்சலிடுகிறார்கள். இஸ்ராயேல் மக்கள். உணவுக்காக தங்களை உண்டாக்கினவரையே உதாசீனப்படுத்துகிறார்கள். நிரந்தரமற்ற உடலை பாதுகாப்பதற்காக நிரந்தரமான கடவுளை புறக்கணிக்கிறார்கள். இதுவே மக்கள் செய்த பெரும் பாவம். "தன்னை உருவாக்கியவரை எதிர்த்து வழக்காடுபவனுக்கு ஐயோ கேடு." (எசா 45:9) என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப தன்னைப் புறக்கணித்த மக்களை கடவுளும் புறக்கணிக்கின்றார். கொள்ளிவாய் பாம்புகளை அனுப்பி கொன்று போடுகின்றார். ஆனால் மனிதன் மனவருந்தி மன்னிப்பு வேண்டி இறைவனிடத்தில் சரணடைந்த போது, இரக்கமும், பேரன்பும் கொண்ட கடவுள், தன்னுடைய மக்களின் பாவங்களுக்கு தானே பரிகாரம் செய்ய முன்வருகின்றார். எந்த பாம்பு மனிதனுக்கு சாபத்தையும், சாவையும் கொண்டு வந்ததோ அதனையே அவனுக்கு மீட்பளிக்கும் அடையாளமாக மாற்றுகின்றார். அன்று பாலைநிலத்தில் மனிதர்களின் பாவங்களுக்கு பரிகாரமாக வெண்கலப்பாம்பு உயர்த்தப்பட்டது போல இன்று இயேசுவும் நம்முடைய அனைத்து பாவங்களுக்கு பரிகாரமாக சிலுவையில் உயர்த்தப்பட்டார். "பாலை நிலத்தில் மேசேயால் பாம்பு உயர்த்தப்பட்டதுபோல மானிடமகனும் உயர்த்தப்பட வேண்டும். அப்போது அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர்." (யோவா3:14). நாம் அனைவரும் நிலைவாழ்வு பெற வேண்டும், இழந்துபோன அருளை மீண்டும் பெற வேண்டும் என்பதற்காக ஆண்டவர் இயேசு நமக்காக சிலுவையில் உயர்த்தப்பட்டார். அந்த இயேசுவின் மீது நம் கண்களை பதியவைப்போம். (எபி 12:1-2) நாம் இனிமேல் பாவத்திற்கு அடிமைகளாய் இராதபடி நம்முடைய உடலின் இச்சைகளை சிலுவையோடு அறைந்து (உரோ 6:6) நிரந்தரமான இயேசுவை பற்றிக்கொண்டு வாழ்வோம், மீட்பை அணிந்துகொள்வோம்.